# amfori BSCI நடத்தை விதி[1]

தற்போதைய **amfori BSCI நடத்தை விதிப் பதிப்பு 1/2014**, amfori BSCI பங்கேற்பாளர்கள் தங்களது வழங்கல் சங்கிலிகளில் அமல்படுத்த முயற்சிக்கும் மதிப்புகள் மற்றும் கொள்கைகளை அமைப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது வெளிநாட்டு வர்த்தக சங்கத்தால் **(amfori -ஆக 1/1/2018 முதல்)** ஆமோதிக்கப்பட்டது. மற்றும், BSCI நடத்தை விதிப் பதிப்பு 2009-ஐ அனைத்து மொழிபெயர்ப்புகளிலும் இது இரத்து செய்கிறது. தற்போதைய amfori BSCI -யின் நடத்தை விதி, மூன்று பிரதான பிரிவுகளைக் கொண்டது: a) அனைத்து வர்த்தக நிறுவனங்களுக்கும் பொருந்தக்கூடிய ஒரு முன்னுரை, விளக்கம், எமது மதிப்பு மற்றும் அமல்படுத்தல்; b) கொள்கைகள், மிகக் குறிப்பாக amfori BSCI பங்கேற்பாளர்களின் தொழில் பங்குதாரர்களைக் குறிப்பவை மற்றும் c) amfori BSCI அமல்படுத்தல் விதிமுறைகள், amfori BSCI மேற்கோள் மற்றும் amfori BSCI சொற்களஞ்சியம் ஆகிய, amfori BSCI -யின் விளக்கம் மற்றும் அமல்படுத்தல் மீதான விவரமான தகவல்களை வழங்கும் நெறிமுறையின் ஒருங்கிணைந்த பகுதிகள்.

amfori BSCI நடத்தை விதி பதிப்பு 1/2014, 1 ஜனவரி 2014 அன்று நடைமுறைக்கு வருகின்றது. இந்த விதியின் கொள்கைகளுக்கான amfori BSCI -யின் கண்காணிப்பு 2015 ஜனவரி மாதம் தொடங்கும். எனவே, BSCI விதி பதிப்பு 2009-க்கு எதிரானத் தணிக்கைகள், ஜனவரி 2015 முதல் செல்லுபடியாகாது. இந்த ஆவணத்தின் ஆங்கிலப் பதிப்பு சட்டபூர்வமாகப் பிணைக்கப்பட்ட ஒன்றாகும்.

## I. முன்னுரை

மனித வளமைக்கும், சமூகப் பொருளாதார வளர்ச்சிக்கும், சர்வதேச வர்த்தகம் என்பது ஒரு முக்கிய வாகனமாக இருப்பதன் அங்கீகாரமாக, வெளிநாட்டு வர்த்தகச் சங்கம் amfori -யால் amfori BSCI **(amfori BSCI)** தொடங்கப்பட்டது.

[1] பதிப்புரிமை 2017 மூலம் amfori

இந்த நடத்தை விதி (**amfori BSCI நடத்தை விதி**) என்பது, amfori BSCI பங்கேற்பாளர்களின் நம்பிக்கை மற்றும் தங்களது தொழில் பங்குதாரர்களிடம் அவர்கள் கொண்டிருக்கும் எதிர்பார்ப்புகளைப் பிரதிபலிக்கின்ற, கொள்கைகள் மற்றும் மதிப்புகளின் தொகுப்பாகும்.

இந்த amfori BSCI நடத்தை விதியானது, சர்வதேச மரபுகளைக் குறிக்கிறது. உதாரணத்திற்கு, உலகளாவிய மனித உரிமைகள் பிரகடனம், குழந்தைகளின் உரிமைகள் மற்றும் வர்த்தகக் கொள்கைகள், வர்த்தகம் மற்றும் மனித உரிமைகளுக்கான ஐ.நா. (UN) வழிகாட்டும் கொள்கைகள், பொருளியல் கூட்டுறவு மற்றும் வளர்ச்சிக்கான அமைப்பு வழிகாட்டுதல்கள் (OECD Guidelines), ஐ.நா. குளோபல் காம்பேக்ட் (UN Global Compact) மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மரபுகள், மற்றும் வழங்கல் சங்கிலியில் உள்ள பணி நிலைமைகளை மேம்படுத்துதல் தொடர்பான பரிந்துரைகள்.

amfori BSCI -யின் நடத்தை விதிகளை ஏற்றுக் கொள்ளும் வணிக நிறுவனங்கள், இந்த ஆவணத்தில் உள்ள கொள்கைகள் மற்றும் தங்கள் செல்வாக்கு வட்டத்திற்குள், மனித உரிமைகள் மீதான தங்களது பொறுப்பு ஆகியவற்றை உறுதியளிக்கின்றன.

amfori BSCI மற்றும் அதன் பங்கேற்பாளர்கள் (**amfori BSCI பங்கேற்பாளர்கள்**), சமூகப் பொறுப்புடைய வணிகத்தின் கொள்கைகளை வலுப்படுத்துவதற்காக, தொழில் பங்குதாரர்கள் மற்றும் பங்குதாரர்களிடையே ஒரு ஆக்கபூர்வமான, வெளிப்படையான உரையாடலைத் தொடர்கின்றனர். மேலும், நிலையான தொழில்களுக்குத் தேவையான முக்கிய அம்சமாக, தொழிலாளர்கள் மற்றும் நிர்வாகத்திற்கிடையே முதிர்ச்சியான தொழில்துறை உறவுகள் வளர்வதை அவர்கள் காண்கின்றனர்.

## II. விளக்கம்

amfori BSCI நடத்தை விதியில், "வணிக நிறுவனங்கள்" என்பது amfori BSCI பங்கேற்பாளர்கள் மற்றும் அவர்களின் வழங்கல் சங்கிலியில் உள்ள தொழில் பங்குதாரர்கள், குறிப்பாக உற்பத்தியாளர்கள் ஆகிய இருவரையும் உள்ளடக்கியது.

amfori BSCI நடத்தை விதியின் (செயலாக்க விதிமுறைகள், amfori BSCI மேற்கோள்கள் மற்றும் amfori BSCI சொற்களஞ்சியம்) முடிவில் குறிப்பிடப்படும் பின்னிணைப்புகள், amfori BSCI நடத்தை விதியின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியை உருவாக்குகின்றன. amfori BSCI நடத்தை விதி, அந்தப் பின்னிணைப்புகளுடன் இணைத்து வாசிக்கப்பட்டு, புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

வழங்கல் சங்கிலியில் தங்களது பங்கைப் பொறுத்தும், amfori BSCI -க்குள் அவை கண்காணிக்கப்பட வேண்டுமா இல்லையா என்பதைப் பொறுத்தும், ஒவ்வொரு வணிக

நிறுவனமும் பல்வேறு அமல்படுத்தல் விதிமுறைகளைக் கடைபிடிப்பதற்காகக் கொண்டுள்ளன.

## III. எமது மதிப்புகள்

amfori BSCI நடத்தை விதியை ஒத்துக் கொள்வதன் மூலமும், அதைத் தங்கள் வழங்கல் சங்கிலிக்குப் பரப்புவதன் மூலமும், amfori BSCI பங்கேற்பாளர்கள் கீழ்க்கண்ட மதிப்புகளால் வழிநடத்தப்படுகிறார்கள்:

- தொடர் மேம்பாடு: amfori BSCI நடத்தை விதியை படிப்படியான முன்னேற்ற அணுகுமுறைகளில் அமல்படுத்துவதற்கு amfori BSCI பங்கேற்பாளர்கள் உறுதி மேற்கொள்கிறார்கள். தங்கள் நிறுவனங்களில் உள்ள பணி நிலைமைகளின் தொடர்ச்சியான முன்னேற்றத்தை தமது தொழில் பங்குதாரர்கள் உறுதிப்படுத்துவதை amfori BSCI பங்கேற்பாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.
- ஒத்துழைப்பு: இணைந்து பணியாற்றுவது மற்றும் பொதுவான ஒரு அணுகுமுறையை மேற்கொள்வதன் மூலம், amfori BSCI பங்கேற்பாளர்கள் தங்களது வழங்கல் சங்கிலிகளில் பணி நிலைமைகளை மேம்படுத்துவதற்கான ஒரு சிறந்த தாக்கம் மற்றும் அதிக வாய்ப்புகளைப் பெறுவர். வழங்கல் சங்கிலியில் தொழில் பங்குதாரர்களுடனான, குறிப்பாக மேம்பாடு அடைவதற்காக ஆதரவு தேவைப்படுபவர்களுடனான உறவில், ஒத்துழைப்பின் மதிப்பு சம அளவு முக்கியமானதாகும்.

  இதேபோல், வணிகம் மற்றும் பாதிக்கப்பட்ட பல்வேறு மட்டங்களிலுள்ள பங்குதாரர்களுக்கும் இடையேயான உறவில் ஒத்துழைப்பு மிக முக்கியமானதாகும்.
- அதிகாரமளித்தல்: amfori BSCI பங்கேற்பாளர்கள் மற்றும் அவர்களது தொழில் பங்குதாரர்களுக்கு, குறிப்பாகக் கண்காணிக்கப்படும் உற்பத்தியாளர் விஷயத்தில், மனித உரிமை மற்றும் தொழிலாளர் உரிமைகளை மதிக்கும் வகையில் அவர்களின் வழங்கல் சங்கிலியை அபிவிருத்தி செய்வதோடு, வழங்கல் சங்கிலியில் வணிக அலகுகளுக்கு நிலையான முறையில் பணி நிலைமைகளை மேம்படுத்த உதவும் சாதனங்களை வழங்கவும் அதிகாரம் அளிப்பதே amfori BSCI -ன் முக்கிய நோக்கமாகும். amfori BSCI கொள்கைகளை வணிக நிறுவனங்களின் கலாச்சாரத்தின் மைத்துக்குக் கொண்டு வருவதில் உள் மேலாண்மை அமைப்புகள் வளர்ச்சி ஒரு முக்கிய பங்கை வகிக்கிறது.

# IV. அமல்படுத்தல்

amfori BSCI நடத்தை விதிகளில் அமைக்கப்பட்டுள்ள கொள்கைகள், amfori BSCI பங்கேற்பாளர்கள் தங்கள் வழங்கல் சங்கிலிகளின் சமுதாய நடத்தை தொடர்பாகக் கொண்டுள்ள **சாதிக்க நினைக்கும் இலக்குகள் மற்றும் குறைந்தபட்ச எதிர்பார்ப்புகளைக்** குறிக்கின்றன.

சாதிக்க நினைக்கும் இலக்குகள் மாறாமல் இருந்தாலும், சரிபார்க்கக்கூடிய சமூக தரநிலைகளாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் amfori BSCI நடத்தை விதிகளின் குறைந்தபட்ச எதிர்பார்ப்புகள், சமூக மாற்றங்களுக்கு ஏற்றாற்போல் மாறலாம்.

**amfori BSCI பங்கேற்பாளர்கள், amfori BSCI நடத்தை விதிகளின் இலக்கை அடைவதற்கு நியாயமான முயற்சிகளைப் பயன்படுத்த வேண்டும்.** எல்லா நேரங்களிலும் தங்களது அனைத்து தொழில் பங்குதாரர்களின் முழுமையான அனுசரிப்பிற்கு உத்தரவாதம் அளிக்க முடியாத போது, amfori BSCI பங்கேற்பாளர்கள், amfori BSCI நடத்தை விதிகளைக் கடைபிடிக்க, குறிப்பாக amfori BSCI நடத்தை விதிகள் கடைபிடிக்கப்படாத ஆபத்து அதிகம் காணப்படும் மண்டலங்கள் மற்றும் துறைகளில், நியாயமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். முழுமையான அனுசரிப்பு என்பது, கணிசமான நேரம், வளங்கள் மற்றும் முயற்சிகளை எடுக்கும் ஒரு செயலாகும். மற்றும் இடைவெளிகள், குறைபாடுகள், தோல்விகள் மற்றும் கணிக்க முடியாத நிகழ்வுகள் எப்பொழுதும் ஒரு சாத்தியமாக இருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. ஆயினும்கூட, amfori BSCI பங்கேற்பாளர்கள் **தங்கள் வழங்கல் சங்கிலிகளில்** இந்த மாதிரியான தோல்விகளை முன்கூட்டியேக் கண்டறிந்து, கண்காணித்து, சரி செய்வதில் உறுதியாக இருக்க வேண்டும். மேலும் சமூக நல்லிணக்கத்தில் உண்மையான அக்கறை கொண்டுள்ள பங்குதாரர்களுடன் ஆக்கபூர்வமான ஈடுபாட்டிற்குத் திறந்த மனதுடன் இருக்க வேண்டும்.

## விதியைப் பின்பற்றுதல்

உள்நாட்டுச் சட்டங்களுக்குக் கீழ்ப்படிவது வணிக நிறுவனங்களின் முதல் கடமையாகும். உள்நாட்டுச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கு இடையே முரண்பாடுகள் இருக்கும் நாடுகளில், அல்லது amfori BSCI நடத்தை விதிகளைவிட வேறுபட்ட பாதுகாப்புத் தரநிலைகள் காணப்படும்போது, வணிக நிறுவனங்கள், தொழிலாளர்கள் மற்றும் சுற்றுச்சூழலுக்கு அதிகமான பாதுகாப்பை வழங்கும் கொள்கைகளைப் பின்பற்றும் வழிகளை நாட வேண்டும்.

## வழங்கல் சங்கிலி மேலாண்மை மற்றும் தொடர் விளைவு

amfori BSCI பங்கேற்பாளர்கள் தங்களுடைய கொள்முதல் நடவடிக்கைகளின் மூலம் வழங்கல் சங்கிலிகளில் சமூக மாற்றங்களைக் கட்டுப்படுத்தத் தங்கள் திறனை ஒப்புக்கொள்கின்றனர். அவர்கள் அனைத்து தொழில் பங்குதாரர்களுடனான தங்கள் உறவுகளை பொறுப்பான வழியில் நிர்வகிக்கிறார்கள் மற்றும் அதையே திருப்பி எதிர்பார்க்கிறார்கள்.

இதற்காக, ஒவ்வொரு வணிக நிறுவனத்திற்கும் பின்வரும் விஷயங்களில் ஒரு ஒத்துழைப்பு அணுகுமுறை தேவைப்படுகிறது, (a) அதன் தொடர்புடைய தொழில் பங்குதாரர்களை ஈடுபடுத்துவது; (b) தங்கள் செல்வாக்கு வட்டத்தில் amfori BSCI நடத்தை விதியை அமல்படுத்தத் தேவையான, நியாயமான மற்றும் சரியான நடவடிக்கைகளை எடுப்பது மற்றும் (c) மட்டுப்படுத்தப்பட வேண்டிய எந்த சவாலையும் சரியான தருணத்தில் கண்டுபிடிப்பதற்காகத் தகவல்களை பரிமாறிக்கொள்வது.

amfori BSCI பங்கேற்பாளர்களும் அவர்களது தொழில் பங்குதாரர்களும், மனித உரிமைகள் மீதான, குறிப்பாக அதிக ஆபத்தான பகுதிகளில் அல்லது துறைகளிலிருந்து வரும்போது, இத்தகைய பாதகமான தாக்கத்தின் மூல காரணங்களைக் கண்டுபிடிக்கப் பாடுபடுகிறார்கள். இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வதற்காக, வணிக நிறுவனங்கள் கவனமாகச் செயல்படுவதுடன், தேவையான மேலாண்மை அமைப்புகள், கொள்கைகள், மற்றும் ஒரு நியாயமான அளவிற்குச் செயல்முறைகளையும் உருவாக்க வேண்டும். அதேபோல வழங்கல் சங்கிலியில் கண்டறியப்படும் தீங்கு விளைவிக்கும் மனித உரிமைத் தாக்கங்களையும் திறம்படத் தடுக்க வேண்டும்.

கண்காணிக்கப்படும் உற்பத்தியாளர்களுக்கு, அவர்களின் வணிக நடைமுறைகளில் amfori BSCI நடத்தை விதியை உட்பொதிக்க ஒரு சிறந்த வழியாக உள் மேலாண்மை அமைப்புகள் குறிப்பாக ஊக்குவிக்கப்படுகின்றன.

amfori BSCI நடத்தை விதியை அமல்படுத்துவதற்கான ஒரு போராட்டத்தின் காரணமாக ஒரு வணிக உறவு அல்லது தொழில் பங்குதாரருடனான ஒரு தனிப்பட்ட ஒப்பந்தம் நிறுத்தப்படுவது, ஒரு இறுதி முடிவாகக் கருதப்படுகிறது. இருப்பினும், ஒரு தொழில் பங்குதாரர் amfori BSCI நடத்தை விதி கொள்கைகளுக்கு இணக்கமாகச் செயல்படத் தவறும்போது, மற்றும்/அல்லது அந்த தொழில் பங்குதாரர் amfori BSCI நடத்தை விதி மற்றும்/அல்லது உள்ளார்ந்த எந்தக் கடமைகளையும் நிறைவேற்றத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க விருப்பப்படாதபோது, ஒரு வணிக உறவு அல்லது ஒரு தனிப்பட்ட வணிக ஒப்பந்தத்தை முறித்துக் கொள்ளத் தேவைப்படலாம்.

## பணியாளர்களின் ஈடுபாடு மற்றும் பாதுகாப்பு

பணியிடச் சிக்கல்கள் மீதான முழுமையான தகவல் பரிமாற்றத்தில், பணியாளர்கள் மற்றும் அவர்களது பிரதிநிதிகளை உள்ளடக்கிய நல்ல மேலாண்மை நடைமுறைகளை

வணிக நிறுவனங்கள் உறுதிப்படுத்த வேண்டும், மற்றும் amfori BSCI நடத்தை விதியின் அபிலாஷைகளுக்கு இணங்க, தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கானச் சரியான நடவடிக்கைகளை அனுமதிக்க வேண்டும். வணிக நிறுவனங்கள், பணியாளர்கள் தங்கள் உரிமைகள் மற்றும் பொறுப்புகளைப் பற்றி அறிந்து கொள்ள குறிப்பிட்ட நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

கூடுதலாக, வணிக இயக்கத்தில் இந்த நடைமுறைகளை வெற்றிகரமாக உட்பொதிக்க, முதலாளிகள், மேலாளர்கள், பணியாளர்கள் மற்றும் பணியாளர்கள் பிரதிநிதிகளுக்கு இடையே போதுமான போட்டியை வணிக நிறுவனங்கள் உருவாக்க வேண்டும். ஒவ்வொரு பணி நிலையிலும், தொடர்ச்சியான கற்பித்தலும் பயிற்சியும் அத்தியாவசியம், குறிப்பாக தொழில்சார் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு சம்பந்தமான விஷயங்களில்.

வணிக நிறுவனங்கள், கடுமையான தாக்கத்திற்குள்ளான தனிநபர்களுக்கும் சமூகங்களுக்கும் திறம்பட்ட இயக்க-நிலை குறை தீர்க்கும் வழிமுறைகளை உருவாக்கவோ அல்லது அவற்றில் பங்கேற்கவோ வேண்டும். நீதிமன்ற முறைமைகள் திறம்பட்டதாகவும், நல்ல வள ஆதாரமுள்ள இடங்களில் கூட, குறை தீர்க்கும் வழிமுறைகள், விரைவான அணுகல் மற்றும் சரிசெய்தல், குறைக்கப்பட்ட செலவுகள் மற்றும் நாடுகடந்த அணுகுமுறை போன்ற குறிப்பிட்ட பலன்களைத் தரலாம்.

# V. கொள்கைகள்

amfori BSCI பங்கேற்பாளர்கள் தங்களுடைய அனைத்து தொழில் பங்குதாரர்களும் amfori BSCI நடத்தை விதிமுறைகளைக் கடைபிடிக்க வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். மேலும், கீழ்க்கண்ட கொள்கைகளைக் கடைபிடிப்பதற்காகக் கண்காணிக்கப்படும் எந்த தொழில் பங்குதாரர்களும் (a) amfori BSCI நடத்தை விதியைத் தாங்கள் அனுசரிக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதை உறுதி செய்தல் மற்றும் (b) உற்பத்தி செயல்(களில்) ஈடுபட்டிருக்கும் தங்களது அனைத்து தொழில் பங்குதாரர்களும் amfori BSCI நடத்தை விதியை அனுசரிப்பதற்கான நியாயமான நடவடிக்கைகளை உறுதி செய்தல், ஆகியவற்றிற்கான ஆதாரங்களை காட்டுவதற்காக உள்ளன.

## சங்கம் ஏற்படுத்துதல் மற்றும் கூட்டு பேரத்தின் சுதந்திரத்திற்கான உரிமைகள்

தொழில் பங்குதாரர்கள்: (a) ஒரு சுதந்திரமான மற்றும் ஜனநாயக முறையில் தொழிற்சங்கங்கள் அமைக்கத் தொழிலாளர்களின் உரிமையை மதிப்பார்கள்; (b)

தொழிற்சங்க உறுப்பினர் என்பதற்காகத் தொழிலாளர்கள் மீது பாகுபாடு காட்ட மாட்டார்கள் மற்றும் (c) தொழிலாளர்களின் கூட்டு பேரத்துக்கான உரிமையை மதிப்பார்கள்.

தொழிலாளர்கள் பிரதிநிதிகள் பணியிடத்தில் வைத்து தொழிலாளர்களை அணுகுவது அல்லது அவர்களுடன் பேசுவதை தொழில் பங்குதாரர்கள் தடுக்க மாட்டார்கள்.

தொழிற்சங்க நடவடிக்கை சட்டவிரோதமானதாகக் கருதப்படும் நாடுகளில் அல்லது சுதந்திரமான மற்றும் தொழிற்சங்க செயற்பாடு அனுமதிக்கப்படாத நாடுகளில் செயல்படும் போது, தொழிலாளர்கள் பணியிடப் பிரச்சனைகளுக்காக நிறுவனத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவதற்காகத் தங்களது சொந்த பிரதிநிதிகளைச் சுதந்திரமாகத் தேர்ந்தெடுப்பதை அனுமதிப்பதன் மூலம் தொழில் பங்குதாரர்கள் இந்தத் தத்துவத்தை மதிக்கிறார்கள்.

## பாரபட்சமற்ற தன்மை

பாலினம், வயது, மதம், இனம், சாதி, பிறப்பு, சமூகப் பின்னணி, இயலாமை, இன மற்றும் தேசிய வம்சாவளி, தேசியவாதம், தொழிற்சங்கங்கள் அல்லது வேறு ஏதேனும் சட்டவூர்வமான நிறுவனங்களில் உறுப்பினர், அரசியல் தொடர்பு அல்லது கருத்துக்கள், பாலியல் நோக்குநிலை, குடும்பப் பொறுப்புகள், திருமண நிலை, நோய்கள் அல்லது பாகுபாட்டை எழுப்பும் எந்தவொரு நிலையையும் வைத்து தொழில் பங்குதாரர்கள் வேறுபாடு காட்ட மாட்டார்கள். குறிப்பாக, மேலே பட்டியலிடப்பட்டுள்ள எந்தவொரு விஷயத்தின் மீதும், தொழிலாளர்கள் தொல்லைப்படுத்தப்பட மாட்டார்கள் அல்லது அவர்கள் மேல் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது.

## நியாயமான ஊதியம்

தொழிலாளர்கள், தாங்களும் தங்கள் குடும்பங்களும் ஒரு கண்ணியமான வாழ்க்கை வாழத் தேவையான அளவு நியாயமான ஊதியமும், சட்டபூர்வமான சமூக நலன்களையும், கீழ்க்காணும் குறிப்பிட்ட எதிர்பார்ப்புகளுக்குப் பாதிப்பின்றி, பெறுவற்கு உரிமை இருப்பதாக மதிக்கும்போது, தொழில் பங்குதாரர்கள் இந்தக் கோட்பாட்டினை கடைபிடிக்கிறார்கள்.

தொழில் பங்குதாரர்கள், குறைந்தபட்சம், அரசாங்கத்தின் 'குறைந்தபட்ச ஊதியச் சட்டம், அல்லது கூட்டு பேரத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில் தரநிலைகள், இவற்றில் எது அதிகமோ, அந்த ஊதியத்தைக் கட்டாயமாகத் தர இணங்க வேண்டும்.

ஊதியங்கள் சரியான காலத்தில், சீராகவும், முழுமையாக செல்லுபடியாகும் நாணயங்களில் செலுத்தப்பட வேண்டும். சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) வரையறையின் படி, பிற சலுகைகளுக்கான தொகை, "பொருளாக" பகுதி ஊதியம்

வழங்குவது ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஊதியங்களின் நிலை, தொழிலாளர்களின் திறன்களையும் படிப்பையும் பிரதிபலிக்கும், மற்றும் வழக்கமான வேலை நேரங்களைக் குறிக்கும்.

பிடித்தங்கள் நிபந்தனைகளின் கீழ் மட்டுமே மற்றும் சட்டத்தால் பரிந்துரைக்கப்படும்போது அல்லது கூட்டு ஒப்பந்தத்தால் நிர்ணயிக்கப்படும்போது மட்டுமே அனுமதிக்கப்படும்.

## கண்ணியமான வேலை நேரம்

கீழுள்ள குறிப்பிட்ட எதிர்பார்ப்புகளுக்குப் பாதகம் இல்லாமல், தொழிலாளர்கள் வாரத்திற்கு 48 வழக்கமான மணி நேரத்திற்கு மேல் வேலை செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று உறுதிப்படுத்தும் போது, தொழில் பங்குதாரர்கள் இந்த கொள்கையைக் கடைப்பிடிக்கின்றனர். இருப்பினும், சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் (ILO) குறிப்பிடப்பட்ட விதிவிலக்குகளை amfori BSCI அங்கீகரிக்கிறது.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) அமைத்துள்ள சர்வதேசக் கட்டமைப்பிற்குள், பொருந்தக்கூடிய தேசியச் சட்டங்கள், தொழிற்துறை வடிவ தரநிலைகள், அல்லது கூட்டு உடன்பாடுகள் ஆகியவை விளக்கப்பட வேண்டும்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பினால் (ILO) வரையறுக்கப்படும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களில், மேலே குறிப்பிடப்பட்டுள்ள வேலை நேர அளவு அதிகமாக்கப்படலாம். அப்போது ஓவர்டைம் வேலை அனுமதிக்கப்படுகிறது.

ஓவர்டைம் வேலை பயன்பாடு விதிவிலக்கானது, தன்னார்வமானது, வழக்கமான ஊதியத்தில் ஒன்றேகால் மடங்கு அதிக விகிதத்தில் செலுத்தப்படவேண்டியது. அது தொழில் ரீதியான அபாயங்கள் கணிசமாக அதிகரிப்பதைக் குறிக்காது. மேலும், தொழில் பங்குதாரர்கள் தங்கள் தொழிலாளர்களுக்கு பின்வரும் உரிமைகளை வழங்க வேண்டும் மற்றும் கூட்டு ஒப்பந்தங்கள் மூலம் வரையறுக்கப்பட்ட விதிவிலக்குகள் இல்லாதபோது, ஒவ்வொரு வேலை நாளிலும் ஓய்வு இடைவேளைகள் மற்றும் ஒவ்வொரு ஏழு நாட்களில் குறைந்த பட்சம் ஒரு நாள் விடுமுறை வழங்க வேண்டும்.

## தொழில்சார் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு

கீழ்க்காணும் குறிப்பிட்ட எதிர்பார்ப்புகளுக்குப் பாதகம் இல்லாமல், தொழிலாளர்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களின் சுகாதாரமான வேலை மற்றும் வாழ்க்கை நிலைமைகளுக்கு மதிப்பளிக்கும் போது, தொழில் பங்குதாரர்கள் இந்தக் குறிப்பிட்ட கொள்கையைக் கடைபிடிக்கின்றனர். இளம் தொழிலாளர்கள், புதிய தாய்மார்கள், கர்ப்பிணிகள், குறைபாடுடைய நபர்கள் போன்ற, ஆனால் அது மட்டுமல்ல, பாதிக்கப்படக்கூடிய தனிநபர்கள் சிறப்புப் பாதுகாப்பு பெற வேண்டும்.

தொழில் பங்குதாரர்கள் தொழில்சார் சுகாதார மற்றும் பாதுகாப்பு விதிமுறைகள், அல்லது உள்நாட்டுச் சட்டங்கள் பலவீனமாகவுள்ள அல்லது மோசமாக அமலாக்கப்படும் இடங்களில் சர்வதேசத் தரங்களுக்கு இணங்க வேண்டும்.

ஒரு பாதுகாப்பான மற்றும் சுகாதாரமான பணிச்சூழலை உறுதிப்படுத்துவதற்கான அமைப்புகளை உருவாக்கவும் செயல்படுத்தவும், நிர்வாகம் மற்றும் தொழிலாளர்கள் மற்றும்/அல்லது அவர்களின் பிரதிநிதிகளுக்கு இடையே உயிர்ப்பான ஒத்துழைப்பு அவசியம். இது தொழில்சார் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு குழுக்களை நிறுவுவதன் மூலம் அடையப்படலாம்.

தொழிலாளர்களின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பிற்குச் சாத்தியமான அச்சுறுத்தல்களைக் கண்டறிந்து, மதிப்பிட்டு, அவற்றைத் தவிர்ப்பதற்கும், அவற்றை நீக்குவதற்கான தீர்வு காண்பதற்கும் தக்க அமைப்புகள் இருப்பதை தொழில் பங்குதாரர்கள் உறுதிப்படுத்த வேண்டும். விபத்துக்கள், காயங்கள் அல்லது உடல்நலக்குறைவு, பணியினால் எழும் நோய்கள், பணியைச் சார்ந்த, அல்லது பணி நேரத்தில் ஏற்படும் நோய்கள் ஆகியவை தொழிலாளர்களுக்கு வராமல் தடுப்பதற்கானத் திறம்பட்ட நடவடிக்கைகளை அவர்கள் எடுக்க வேண்டும். இந்த நடவடிக்கைகள், பணியிடத்திற்குள் இயற்கையாக அமையப்பெற்ற ஆபத்துக்களுக்கான காரணங்களைக் குறைப்பதில் முடிந்த அளவு நியாயமானதாக இருப்பதை நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

விபத்துக் காலங்களில் தொழிலாளர்களின் பாதுகாப்பை மேம்படுத்த, தொழில் பங்குதாரர்கள், கட்டாயக் காப்பீட்டுத் திட்டங்களை நாடுவார்கள்.

தொழில் பங்குதாரர்கள், தங்கள் செல்வாக்கிற்கு உட்பட்ட வட்டத்திற்குள், தாங்கள் பயன்படுத்தும் உபகரணங்கள் மற்றும் தொழிலாளர் குடியிருப்பு வசதிகள் உட்பட கட்டிடங்களின் உறுதி மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தத் தகுந்த நடவடிக்கைகள் மற்றும் எந்த ஒரு முன்னெச்சரிக்கை அவசரத்திற்கும் எதிரான பாதுகாப்பான நடவடிக்கைகள் அனைத்தையும் எடுப்பார்கள். தவிர்க்க முடியாத ஆபத்துக்களிலிருந்துத் தப்பிப்பதற்காக, பணியிடத்தை விட்டு அனுமதியின்றி வெளியேறும் தொழிலாளர்கள் உரிமையை வணிகக்கூட்டாளிகள் மதிக்க வேண்டும்.

போதுமான தொழில்சார் மருத்துவ உதவி மற்றும் தொடர்புடைய வசதிகளை தொழில் பங்குதாரர்கள் உறுதி செய்ய வேண்டும்.

குடிநீர், பாதுகாப்பான மற்றும் சுத்தமான உணவு மற்றும் ஓய்விடங்கள் மற்றும் சுத்தமான மற்றும் பாதுகாப்பான சமையல் மற்றும் உணவு சேமிப்பகப் பகுதிகள் ஆகியவை கிடைப்பதை தொழில் பங்குதாரர்கள் உறுதி செய்ய வேண்டும். மேலும், தொழில் பங்குதாரர்கள், அனைத்துத் தொழிலாளர்களுக்கும் பயனளிக்கக்கூடியத் தனிப்பட்ட பாதுகாப்பு உபகரணங்களை (PPE) எப்போதும் இலவசமாக வழங்க வேண்டும்.

## குழந்தைத் தொழிலாளர்கள் கிடையாது

சட்டப்பூர்வமாக வரையறுக்கப்பட்ட கட்டாயக் கல்வியை நிறைவு செய்யும் குறைந்தபட்ச வயதுக்குட்பட்ட குழந்தைகளை, நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பணிக்கு அமர்த்தாத போது, இந்த ஒப்பந்தத்தை தொழில் பங்குதாரர்கள் கடைப்பிடிக்கிறார்கள். இது, சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) அங்கீகரித்துள்ள விதிவிலக்குகள் தவிர, 15 வயதிற்குக்குக் குறைவாக இருக்காது.

தொழில் பங்குதாரர்கள் ஆட்சேர்ப்புச் செயல்முறையின் ஒரு பகுதியாக வலுவான வயது சரிபார்ப்பு வழிமுறைகளை உருவாக்க வேண்டும், இது எந்தவொரு விதத்திலும் பணிபுரிபவர்களைத் தாழ்த்துவதாகவோ அல்லது அவமதிப்பாகவோ இருக்கக்கூடாது. எவ்வகைச் சுரண்டல்களிலிருந்தும் குழந்தைகளைப் பாதுகாப்பதை இந்தக் கொள்கை நோக்கமாகக் கொண்டுள்ளது. விபச்சாரம் அல்லது போதைப்பொருள் கடத்தல் போன்ற அதிக ஆபத்தான வேலைகளில் ஈடுபடக்கூடும் என்பதால் குழந்தைகளை வேலையை விட்டு வெளியேற்ற நேரிடும்போது சிறப்புக் கவனம் செலுத்தப்பட வேண்டும். பணியிடத்திலிருந்து குழந்தைகளை அகற்றுவதில், தொழில் பங்குதாரர்கள் உயிர்ப்பான முறையில், பாதிக்கப்பட்ட குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்யும் நடவடிக்கைகளை அடையளாம் காண வேண்டும். பொருத்தமான சமயத்தில், பாதிக்கப்பட்ட குழந்தைகளின் குடும்பத்திலுள்ள வயது வந்தோருக்குக் கண்ணியமான வேலைகளை வழங்குவதற்கான வாய்ப்புகளை அவர்கள் தொடர வேண்டும்.

## இளம் பணியாளர்களுக்குச் சிறப்புப் பாதுகாப்பு

இளைஞர்கள் இரவில் வேலை செய்யவில்லை என்பதை உறுதி செய்கையில் இந்தக் கொள்கையை தொழில் பங்குதாரர்கள் கடைப்பிடிப்பதாகிறது. மேலும் இந்த கொள்கையில் உள்ள குறிப்பிட்ட எதிர்பார்ப்புகளுக்குக் பாதகம் இல்லாமல், அவர்களின் உடல்நலம், பாதுகாப்பு, ஒழுக்கம் மற்றும் வளர்ச்சிக்குத் தீங்கு விளைவிக்கும் வேலை நிலைமைகளுக்கு எதிராக அவர்கள் பாதுகாக்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும்.

இளம் தொழிலாளர்கள் வேலை செய்யும் இடங்களில், தொழில் பங்குதாரர்கள் உறுதி செய்ய வேண்டியவை (அ) வேலையின் தன்மை அவர்களின் உடல் நலத்திற்கோ முன்னேற்றத்திற்கோ தீங்கு விளைவிக்காது; (ஆ) வேலை நேரம் அவர்களின் பள்ளிக்கூட வருகைக்குக் பாதகம் விளைவிக்காதவாறும், தொழில்துறை நோக்கு நிலையில் அவர்களின் பங்கேற்பு தகுதியுள்ள அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது பயிற்சி அல்லது பயிற்றுவிப்புத் திட்டங்களிலிருந்து பயன் பெறும் திறன் உடையவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

இளம் தொழிலாளர்களுக்குத் தீங்கு நேர்வதைத் தடுப்பதற்கான, அடையாளம் காண்பதற்கான மற்றும் குறைப்பதற்கானத் தேவையான வழிமுறைகளை தொழில் பங்குதாரர்கள் அமைக்க வேண்டும்; இளம் தொழிலாளர்களுக்கான சிறப்புக் கவனத்துடன் திறம்பட்ட குறைதீர்க்கும் வழிமுறைகள் மற்றும் தொழில்சார் உடல்நலம் மற்றும்

பாதுகாப்புப் பயிற்சித் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் அவர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும்.

## அபாயகரமான பணி எதுவும் கிடையாது

இந்த அத்தியாயத்தில் அமைந்துள்ள குறிப்பிட்ட எதிர்பார்ப்புகளுக்குப் பாதகமில்லாது, தொழில் பங்குதாரர்கள் இந்தக் கொள்கையைக் கடைபிடிக்கின்றன, (a) தங்களின் பணி உறவுகள் தங்கள் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பற்ற தன்மையையும் சமூக அல்லது பொருளாதாரப் பாதிப்புகளையும் ஏற்படுத்தாது என்பதை உறுதிப்படுத்தும்போது; (b) தேசியச் சட்டம், மரபு அல்லது நடைமுறை மற்றும் சர்வதேச தொழிலாளர் தரநிலைகளுடன் இணக்கமாக நிறுவப்பட்ட, அங்கீகரிக்கப்பட்ட மற்றும் ஆவணப்படுத்தப்பட்ட பணி உறவு, இவற்றில் எதில் பாதுகாப்பு அதிகமோ அதன் அடிப்படையில் வேலை நடைபெறுகிறது என்பதை உறுதிசெய்யும்போது.

வேலைக்குள் நுழைவதற்கு முன்பு, வேலை நேரம், ஊதியம், ஊதியம் வழங்கும் முறை உட்பட, தொழிலாளர்களின் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் வேலைவாய்ப்பு நிலைமைகள் குறித்து அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் தகவல்களை தொழில் பங்குதாரர்கள் வழங்க வேண்டும்.

பெற்றோர்களாக, கவனிப்பாளராக கடமையாற்ற வேண்டிய, குறிப்பாக புலம்பெயர்ந்தோர் மற்றும் குறிப்பிட்ட கால இடைவெளிகளில் குழந்தைகளை தங்களது சொந்த ஊரில் விட்டுவிட்டு வேலைக்கு வரும் பெண்கள் மற்றும் ஆண்கள் ஆகிய பணியாளர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் கண்ணியமான பணி நிலைமைகளை வழங்குவதை தொழில் பங்குதாரர்கள் நோக்கமாகக் கொள்ள வேண்டும்.

தொழில் பங்குதாரர்கள், வேலை வாய்ப்பு ஒப்பந்தங்கள் வேண்டுமென்றே சட்டத்தின் உண்மையான நோக்கத்துடன் ஒத்துப்போகவில்லை என்ற வகையில் அவற்றைப் பயன்படுத்துவதில்லை. இதில் உள்ளடங்கியவை - ஆனால் அவை மட்டுமில்லாமல் - (a) திறமைகளை வெளிக்கொணர்வதற்கோ அல்லது முறையான வேலைவாய்ப்பை வழங்குவதற்கோ எந்த நோக்கமும் இல்லாத பயிற்சித் திட்டங்கள், (b) தொழிலாளர்கள் பாதுகாப்பை வலிமையற்றதாக்கப் பயன்படுத்தப்படும் குறிப்பிட்ட கால அல்லது நிச்சயமற்ற வேலை, மற்றும் (c) ஒப்பந்த அடிப்படையிலான தொழிலாளர் நியமனம். மேலும், துணை ஒப்பந்தத்தைப் பயன்படுத்துவதுத் தொழிலாளர்களின் உரிமைகளை வலிவற்றதாக்கும்.

## கொத்தடிமைத் தொழிலாளர் கிடையாது

தொழில் பங்குதாரர்கள், எவ்வகையிலும் தொழிலாளர்களை அடிமைப்படுத்துதல், கட்டாயப்படுத்துதல், பிணைக்கப்பட்டவர்களாக்குதல், கடத்துதல் அல்லது தன்னார்வமற்றவர்களை வற்புறுத்துதல் போன்றவற்றில் ஈடுபடக் கூடாது.

தங்களது தொழில் பங்குதாரர்கள் இவ்வாறு கொத்தடிமை முறையில் தொழிலாளர்களை ஈடுபடுத்திப் பலனடைந்தால், தாங்களும் அந்தக் குற்றத்திற்கு உடந்தையாக இருப்பதாக மற்ற பங்குதாரர்களும் குற்றச்சாட்டுகளை எதிர்கொள்ள நேரிடும்.

நேரடியாகவோ மறைமுகமாகவோ புலம்பெயர்ந்த தொழிலாளர்களை ஈடுபடுத்தும்போதும், பணியமர்த்தும்போதும், தொழில் பங்குதாரர்கள் சிறப்பு கவனம் செலுத்த வேண்டும்.

தன் முதலாளியிடம் கண்ணியமான முறையில் அறிவித்துவிட்டு, தொழிலாளர்கள் தங்கள் பணியிடத்தை விட்டு வெளியேறும் மற்றும் சுதந்திரமாக வேலையை விட்டு நிற்கும் உரிமையை தொழில் பங்குதாரர்கள் அனுமதிக்க வேண்டும்.

தொழிலாளர்கள், மனிதாபிமானமற்ற முறையில் அல்லது தரக்குறைவாக நடத்தப்படவில்லை, உடல் ரீதியான தண்டனை, மனம் அல்லது உடல் ரீதியான அழுத்தம் மற்றும்/அல்லது மோசமாகத் திட்டுதல் ஆகியவற்றிற்கு உட்படுத்தப்படவில்லை என்பதை தொழில் பங்குதாரர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

அனைத்து ஒழுங்கு நடைமுறைகளும் எழுத்தில் தரப்பட வேண்டும், தெளிவான மற்றும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் தொழிலாளர்களுக்கு வாய்மொழியாக விளக்கப்பட வேண்டும்.

## சுற்றுச்சூழல் பாதுகாப்பு

இந்த அத்தியாயத்தில் அமைந்துள்ள குறிப்பிட்ட எதிர்பார்ப்புகளுக்குப் பாதகம் இன்றி, சுற்றுச்சூழல் சீரழிவைத் தவிர்க்கத் தேவையான நடவடிக்கைகளை தொழில் பங்குதாரர்கள் எடுக்கும்போது, அவர்கள் இந்த கொள்கையைக் கடைப்பிடிப்பதாகின்றது.

தொழில் பங்குதாரர்கள், நடவடிக்கைகளின் விசேஷமானச் சுற்றுச்சூழல் தாக்கத்தை மதிப்பீடு செய்ய வேண்டும், மேலும் அவர்களின் சுற்றுச்சூழல் பொறுப்புகளைப் பிரதிபலிக்கும் திறம்பட்ட கொள்கைகளையும் நடைமுறைகளையும் உருவாக்குதல் வேண்டும். சமூகம், இயற்கை வளங்கள் மற்றும் ஒட்டுமொத்தச் சூழலில் எதிர்மறையான விளைவுகளைத் தடுக்க அல்லது குறைக்கப் போதுமான நடவடிக்கைகளை அவர்கள் அமல்படுத்த வேண்டும்.

## நெறிமுறைசார் வர்த்தக நடத்தை

தொழில் பங்குதாரர்கள், இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் எதிர்பார்ப்புகளுக்குப் பாதகமில்லாது, **ஏதாவது ஊழல் நடவடிக்கை**, மிரட்டிப் பணம் பறித்தல் அல்லது மோசடி, அல்லது ஏதாவது வடிவத்தில் லஞ்சம் ஆகியவற்றில் - இதில் மட்டுமல்ல, வாக்குறுதியளித்தல், படைத்தல், எந்தவொரு முறையற்ற நாணய அல்லது

பிற ஊக்கத்தொகை வழங்குதல் அல்லது ஏற்றுக்கொள்ளுதல் போன்றவற்றில் ஈடுபடாதிருந்தால் இந்தக் கொள்கையைக் கடைபிடிப்பவர்கள் ஆகின்றனர்.

தொழில் பங்குதாரர்கள், தங்கள் நடவடிக்கைகள், **கட்டமைப்பு மற்றும் செயல்திறன்** பற்றிய துல்லியமான தகவல்களை வைத்திருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறார்கள், மேலும் பொருந்தும் விதிமுறைகளுக்கும், தொழில்முறை தரநிலை நடைமுறைகளுக்கும் இணங்கி அவற்றை வெளிப்படுத்த வேண்டும்.

தொழில் பங்குதாரர்கள், பொய்யான தகவல்களைத் தருவதோ, வழங்கல் சங்கிலியில் எந்த தவறான உருவமைப்பைத் தருவதோ கூடாது.

மேலும், தனிப்பட்ட தகவல்களை (தொழிலாளர்கள், தொழில் பங்குதாரர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் தங்கள் செல்வாக்கு வட்டத்தில் உள்ள நுகர்வோர்கள் உட்பட்டோரின்) சேகரித்து, பயன்படுத்தவும், முறையான பாதுகாப்புடன் செயல்படுத்தவும் வேண்டும். தனிப்பட்ட தகவலின் சேகரிப்பு, பயன்பாடு மற்றும் பிற செயலாக்கம் முதலியவை, தனியுரிமை மற்றும் தகவல் பாதுகாப்பு சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறை தேவைகள் ஆகியவற்றுடன் இணங்க வேண்டும்.

# VI. பின்னிணைப்புகள்

1. அமல்படுத்தல் விதிமுறைகள்
2. amfori BSCI மேற்கோள்: சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மரபுகள் மற்றும் பரிந்துரைகள் போன்ற விதியை அமல்படுத்தல் தொடர்பான சர்வதேச தரநிலைகளை ஒருங்கிணைத்தல்.
3. amfori BSCI சொற்களஞ்சியம்

********

amfori ஒரு வெளிப்படையான மற்றும் நீடித்து நிலைக்கக்கூடிய வர்த்தகத்திற்கான ஓர் உலகளாவிய முன்னணி தொழில் கூட்டணி ஆகும். எல்லா வர்த்தகங்களும் ஒவ்வொருவருக்கும் சமூக, சுற்றுச்சூழல் சார்ந்த மற்றும் நிதிசார்ந்த பலன்களை அளிக்கும் ஓர் உலகமே எங்கள் தொலைநோக்குப் பார்வை ஆகும்.

amfori
Av. De Cortenbergh, 172
1000 ப்ருசெல்ஸ்
பெல்ஜியம்
தொலைபேசி: +32-2-762 05 51
தொலைநகல்: +32-2-762 75 06
info@amfori.org
www.amfori.org